# அலிகேட்டர் களை (Alligator weed)

*Alternanthera philoxeroides*

## அலிகேட்டல் களை என்பது என்ன?

உலகிலுள்ள பாதிப்பு அதிகம் தரும் களைகளில் அலிகேட்டர் களையும் ஒன்றாகும். நிலம் மட்டுமல்லாமல் நீர் சார்ந்த பிரதேசங்களையும் இத்தாவர இனம் பாதிக்கும்.

விக்டோரியா பிராந்தியத்திலுள்ள அனைத்து அலிகேட்டர் களைகளையும் அகற்றும் பணியை அப்பிராந்திய ஊள்ளூராட்சி நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது.



**படம்: அலிகேட்டர் களையை பெரிதாக்கி காட்டும் படம்**

## அலிகேட்டர் களையை உண்ணுவதோ வீட்டுத் தோட்டத்தில் வளர்ப்பதோ உகந்ததல்ல

அலிகேட்டர் களையை (*Alternanthera sessilis*) பொன்னாங்கன்னி (Mukunuwenna) என நினைத்து பலரும் அதை கீரையென நினைத்துள்ளார்கள். நீங்கள் வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கவோ உணவாக உட்கொள்ளவோ தகாத தாவர வகையே இந்த அலிகேட்டர் களையினம்.

இவை விரைவாக பரவக்கூடியதுடன் ஏனைய செடிகளுக்கும் பழ, மரக்கறி தாவரங்களுக்கும் சவாலாக அமையக்கூடியன. அவை உங்கள் வீட்டுத் தோட்டத்திலோ பயிர் நிலங்களிலோ வளரும்போது, ஏனைய பயிர்களின் விளைச்சலையும் தரத்தையும் பாதிக்கின்றன.

அலிகேட்டர் களைகள் மண்ணுள்ள பாரவுலோகங்களையும் அகத்துறிவதால் அவற்றை உட்கொள்ளவது உகந்ததல்ல.

மேலும் அலிகேட்டர் களைகள் சில பூச்சியினங்களின் சிறந்த வாழிடமாக காணப்படுகின்றன. உதாரணமாக நுளம்புகள். பூச்சிகள் உங்கள் வீட்டுத் தோட்டத்தில் பரவ ஆரம்பிக்கும் போது அவற்றை உங்களால் கட்டுப்படுத்தவும் இயலாமல் போகலாம்.

## அலிகேட்டர் களைகள் சூழலின் சமநிலையை உகந்ததல்ல

நீர் நிலைகளையும் வீட்டுத் தோட்டங்களையும் புல்வெளிகளையும் மேய்ச்சல் நிலங்களையும் அலிகேட்டர் களைகள் ஆக்கிரமிக்கக் கூடியன.

அவை விரைவாக பரவுவதால் கட்டுப்படுத்தவது கடினம்.

பிளாத்திப்பசு போன்ற அவுஸ்திரேலியாவுக்கே உரித்தான மிருகங்களின் இருப்பையும் இந்த களையினம் பாதிக்கின்றது. இந்த களையினம் நீர் நிலைகளில் பரவுவதால் மிருகங்களுக்கு உணவு கிடைக்காமல் போகும்.

மீன் பிடித்தல், கயாக்கிங் (Kayaking) மற்றும் நீர்ச் சறுக்கல் போன்ற மனித செயற்பாடுகளையும் இவை பாதிக்கக் கூடியன.

ஆறுகளிலும குளங்களிலும் ஓடைகளிலும் பரவும் இவை விவசாயிகளும் மேலதிக செலவை நேரச்செய்து உணவு விலையை அதிகரிக்கச் செய்கின்றன.

## அலிகேட்டர் களையை எவ்வாறு இனங்காணுவது



**படம்: அலிகேட்டர் களையில் பூவும் இலைகளும் உள்ளன**

நீர் நிலைகளிலும் நிலப் பிரதேசத்திலும் அலிகேட்டர் களைகள் வளரக்கூடியன. இளம்பச்சை நிறத்தில் சோடியாக இலைகள் தண்டில் இடம் விட்டுவிட்டு வளரும்.

தண்டு குழல் போன்றது.

தண்டின் மேல்பகுதியில் பூக்கள் உருவாகுவதுடன் வெள்ளை நிறத்தில் பந்தின் வடிவம் கொண்டிருக்கும்.

## அலிகேட்டர் களை குறித்து அறிவித்து உதவுதல்

அலிகேட்டர் களையை எமது விக்டோரியா பிராந்தியத்திலிருந்து அகற்ற உள்ளூராட்சி நிறுவனம் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு உங்கள் ஆதரவை வழங்கி பிராந்தியத்தின் இரம்மியமான சூழலையும் விவசாய துறையையும் பாதுகாக்க கைகோருங்கள்.

அலிகேட்டர் களைகளை உங்கள் வீட்டுச்சூழலிலோ நீங்கள் வேறேதும் இடத்திலோ கண்டால் அதுகுறித்து எமக்கு அறியப்படுத்துங்கள். அவற்றை அகற்றவும் பரவ விடாமல் தடுக்கவும் நாங்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவோம்.

இது விக்டோரியா விவசாயத்தால் (Agriculture Victoria) வழங்கப்படும் இலவச சேவையாகும்.

விக்டோரியா விவசாயத்தை தொடர்புகொள்ளுங்கள்:

- 136 186 என்ற இலக்கத்தை அழைத்து வாடிக்கையாளர் சேவை அணுகுங்கள் அல்லது
- மின்னஞ்சல் weed.spotters@agriculture.vic.gov.au.

இந்த களை வகையை நீங்களாகவே அகற்றவோ கட்டுப்படுத்தவோ எத்தனிக்காதீர்கள் அவை இன்னுறம் பரவ உங்கள் செயற்பாடு வித்திடலாம்.

## ஆபத்தான களை வகையிலிருந்து விக்டோரியாவை பாதுகாக்க நீங்கள் வழங்கும் பங்களிப்பிற்கு விக்டோரியா விவசாயம் நன்றி கூறுகிறது



**படம்: அலிகேட்டர் களையில் பூவும் இலைகளும் உள்ளன**

### அணுகல்

136 186 என்ற இலக்கத்தை அழைத்து வாடிக்கையாளர் சேவை அணுகுவதன் மூலமோ www.agriculture.vic.gov.au என்னும் இணையத் தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலமோ நீங்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

AGRICULTURE VICTORIA